புதினப் பத்திரிகையாகப்
பதிவுசெய்யப்பெற்றது.

இந்துசாதனம்.

விரோதி ௵ (1889)
ஆவணி மீ உஉஉ
ஆரம்பமானது.

பத்திரக் கிரயம்.	
(முற்பணமாகக் கொடுக்கவேண்டியது.)	
யாழ்ப்பாணப்பட்டினம்: ௵ ௧-க்கு	ரூ. உ-உ௫.
வெளியூர், இந்தியா: ,,	ரூ. ௩-உ௫.
தொலைவாய்ப்பகுதி: ,,	ரூ. ௩-எ௫.
தனிப்பிரதி சதம்	-0௫.

THE HINDU ORGAN.
குருவாரந்தோறும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

விளம்பர விகிதம்.		ரூ. ச.
முதன்முறைக்கு:—	ஒருகலம்	எ-௫0.
,,	அரைக்கலம்	ச-00.
,,	கால்கலம்	உ-௫0
,,	ஒரு அங்குலம்	-௫0.
அபிர்சமுறைகட்குடை விகிதங்களில் அனைகாசி		

புத்தகம் - உஎ. { யாழ்ப்பாணம்:— நளஞு ஆனிமீ ௮உ ; ௧௯௧௬-ம்௵ ஜூன்மீ உஉ. } இலக்கம்—சகூ

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச் சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப் பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப் பிறைபூத்த சடைமவுலிப் பிரானூர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றோது மதம்பூத்த விநாயகன்றாள் வணங்கி வாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம், வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக,
ஆழ்க தீயதெல் லாமர னாமமே, சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

விளம்பரம்..

THE CHEAPEST HOUSE FOR HIGH CLASS SILK CLOTHS.

நம்பிக்கையும், நாணயமும், சகாயமுமான பட்டு வர்த்தகசாலை எது?

காசியிற் பிரபல பட்டுவர்த்தகர்களாகிய கே. எஸ். முத்தையா கம்பெனியார்

என்று தெரிந்துகொள்ளுங்கள்.

இங்கு, அநேக நவீன கலர்களிற் புதுமாதிரியான பட்டுப்புடைவைகள், ரவிக்கைக்குட்டைகள், தாவணிகள் பிள்ளை (பல்க்காறு) வேட்டிகள், தலைக்குட்டைகள், நார்மடித் தினிசுகள், வெண்பட்டு தோத்தி, அங்க வஸ்திரம், சோமன் ஜோடி முதலிய பலவிதமான பட்டாடைகளுஞ் சகாயமான விலைக்குச் சித்தமாக விருக்கின்றன. விபரமான கேட்லாக் விரும்பினுல் இனுமாகப் பெற்றுக்கொள்ளலாம். உடனே எழுதுங்கள்.

K. S. Muthiah & Co.,
"Silk House",
BENARES, CITY.

பனைமரங்கள்.

நூறு பனை மரங்களிலிருந்து ௫00 ரூபா பெறுமதியான வரும்படி பெறலாம்.

இது நூறு மரங்களிலிருந்து வரக்கூடிய வரும்படியின் சராசரி மதிப்பு. இது தென்னைகளிலிருந்துவரக்கூடிய வரும்படியிலும் அதிகம். தக்க முயற்சி செய்தால் யாழ்ப்பாணத்திலே இலங்கையின் மற்றெந்தப் பகுதிகளிலும்பார்க்கப் பனைமரங்களிலிருந்து அதிக லாபம் பெறலாம்.

இடைவிடாது கள்ளுக் கட்டினுல் மரத்துக்குமரம் வித்தியாசமின்றி எந்தமரத்திலும் ஒரேமாதிரியாகக் கள்ளுச் சேர்க்கலாம். முதல் வருஷத்தில் இப்படி இல்லாதிருக்கக்கூடும். ஆனுல் இரண்டாம் வருஷத்தில் எந்த மரத்திலும் கள்ளு நல்லாய்ச் சேர்க்கலாம். இரண்டாம் வருஷப் பலனையடைவதற்கு முதலாம்வருஷத்தில் நல்லவேலை செய்ய வேண்டும்.

இரண்டாம்வருஷத்தில் நூறு நாட்களுக்காகுதல் ஒவ்வொரு மரத்திலுமிருந்து ஒவ்வொரு கலன் கள்ளுச் சேர்க்கலாம். ஆகவே நூறு மரங்களிலிருந்து ௧0,000 கலன் கள்ளுச் சேர்க்கலாம்.

ஒவ்வொரு கலன் கள்ளிலிருந்தும் ஒன்றேடு ஐந்திலொரு ருத்தல் பனங்கட்டி செய்யலாம். ஆனுல் ஒருருத்தல் வீதப்படி கணக்கிட்டாலும் ௧0,000 ருத்தல் அல்லது உ00 கண்டி பனங்கட்டி செய்யலாம்.

குறைந்தபட்சமாக கண்டி ஒன்று ரூபா உருவீமதாகப்பார்த்தாலும் நூறு மரங்களிலிருந்து ௫00 ரூபா வரும்படி பெறலாம்.

இதைப்பற்றி முழுவிபரங்களு மடங்கியுள்ள பிரபந்தங்களை எங்களுக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

விலாசம்:—
இலங்கைச் சீனிக் கம்பனியார்,
வல்லுவெட்டித்துறை.

கட்பார்வை.

குளிர்ச்சியான சந்திரகாந்த வில்லைபோட்ட
கண்ணுடிகளைப் பாவித்துப்
பார்வையைக் காப்பாற்றுங்கள்.
திறமான மூக்குக் கண்ணுடிகள்
எங்களிடம்
சகாயவிலைக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எம் கல்லையா அன் சன்ஸ்,
பறங்கித்தெரு,
யாழ்ப்பாணம்.

S. U. N. & Co.

Weaving Silk Manufacturers. BENARES CITY, U. P.

பேரிய கம்பேனி நாணயமான சரக்குகள்

இந்தக் கம்பெனியில் சொகுசான உத்தமமான பனாரிஸ் பட்டுச் சேலைகள், ரவிக்கைகள், துப்பட்டாக்கள், பஸ்காறு, காஷ்மீர் போர்வைகள், குத்திராட்சங்கள், குமுக்கைகளின் விளையாட்டுச்சாமான்கள் முதலான அபூர்வமான சாமான்களைப் பற்றிய 68 பக்கமுள்ள ஒரு "காட்லாக்"கும் ஒரு காசிபைரவர் படமும் கோருகிறவர்களுக்கு இனுமாய் அனுப்பப்படும்.

S.U.N.&Co
BENARES CITY.
KASHI
VISHWESHWAR.

எஸ்.யூ.என். அண்டு கம்பேனி,
பனாரிஸ் ஸிட்டி.

பம்பாய்ச் சேலைகள்.

மிகவும்நாணயமானது! மிகவும்சரசமானது!!
16 முழ நீளம்.

இந்தச் சேலைகள் சோர்த்தியான வெள்ளை மல்லில் மத்தியில் மாங்காய், அன்னம், கிளி, சூரியப்பிறை, சந்திரப்பிறை, நக்ஷத்திரம், புட்டாக்கள்; இவை கன்போல்ஒவ்வொரு சேலைகளிலும் ஒவ்வொருவிதமுண்டு. கரைகளிலும் முந்தானைகளிலும் விசித்திரமான புஷ்பக் கொடிகள் போட்டிருக்கும். இந்தச் சேலைகள் பம்பாயிலிருந்து ஸ்பெஷலாகக் கொஞ்சந்தான் தருவித்திருக்கிறோம். வேண்டியவர்கள் கூடிய சீக்கிரத்திற் தருவித்துக்கொள்ளவும். செட்டால், சிங்கப்பூர், மோரீஸ் முதலிய தேசங்களுக்கு முற்பணமில்லாமல் வி. பி. யில் அனுப்ப முடியாது. சேலை 1-க்கு கிரயம் ரூபா 2, அணு 4.

கனக அண்டு கம்பெனி,
பார்க்டவுன் போஸ்ட்,
மதராஸ்.

ஆறுமுகநாவலரவர்களால்
அச்சிற்பதிப்பிக்கப்பட்ட
தமிழ்ப்புத்தகங்கள்
வண்ணுர்பண்ணைச்
சைவப்பிரகாசவித்தியாசாலையில்
விற்கப்படும்.
V. P. போஸ்டில் அனுப்பவேண்டுமோ
தபாற்செலவுமாத்திரம் மூற்றி அனுப்பல்
வேண்டும்.

சாலாமிஸ்ரி லேகியம்.

இந்த லேகியத்தை யான் அநேக பிரபுக்களுக்குச் செய்து கொடுத்துப் பல வியாதிகளைக் குணப்படுத்தியதால் அவர்கள் மனமகிழ்ந்து வெகுமதிகளையுங் கொடுத்திருக்கிறார்கள். இதை நான் விளம்பரத்தில் உலக நன்மைக்காகப் பிரசுரித்திருக்கிறேன் ஆனுல் பிரபுக்கள் மாத்திரமல்ல ஏழைகளுமிதனுல் உண்டாகும் சுகத்தை அடையும்படி பொதுஜன நலத்தைக்கருதியே யிப்போது இந்தலேகியத்தைப்பற்றிப் பிரசுரித்து வருகிறேன்.

இது சாலாமிஸ்ரி, குங்குமப்பூ, சிலாஜித், கஸ்தூரி, குமாஸ்தகா, பீதாறு, சாலாமுஸ்லி, சப்பேமுத்ஸ்லி, பிஸ்தாஸ், சார்ப்பருப்பு, பாதம்பருப்பு, சாத்தாவாரி, நீர்முள்ளிவிதை, நாகப்பூ, வங்கபஸ்பம், அபரகபஸ்பம், பவளபஸ்பம், வெள்ளிபஸ்பம், அயகாந்த செந்தூரம், சாபபிராணிப்பதங்கம், இன்னும் அநேக புஷ்டியான மூலி வகைகள் சேர்த்துச் செய்யபட்டிருக்கிறது.

இதனுல் நீரிழிவு, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, மூலச்சூடு ஒருவருஷத்துள் உண்டாயிருக்கும் பக்கவாய்வு, இருமல், காசம், பித்தகாமாலை, பித்தபாண்டு, பீனிசம், கைகால்காந்தல், வலி, இடுப்புவலி, பக்கவாய்வு, சூலைவாய்வு, இன்னும் அனேக கடுமையான வியாதிகள் தீரும். ஸ்திரீகள் இந்த லேகியத்தைச் சாப்பிட்டுவந்தால், மேற்சொல்லியவியாதிகள் சுகமாவதுடன் சூதகவாய்வு, பிரசவ அறையில் உண்டாகும் நோய்கள் தீர்ந்து தேகபுஷ்டியும் பலமும்பெறுவார்கள்; பால் விர்த்தியாகும்.

இந்த லேகியத்தின் விலை இருத்தல் ஒன்றுக்கு ரூபா உ0 அரைருத்தலுக்கு ரூபா ௧0 கால ருத்தலுக்கு ரூபா ௫. தபாற் செலவு பிரத்தியேகம.

விலாசம்:— க. ஆறுகம்பிள்ளை,
ஆயுர்வேத வைத்தியசாலை,
இல. 96 முதல் மருத லேன்,
கொழும்பு.

ஓடுகளும் சிமெந்தும்.

BEST PORTLAND CEMENT
SPECIALLY MANUFACTURED FOR JOSEPH & Co CEYLON
TRADE MARK
COLOMBO
JAFFNA
TILE BRAND

பெருந் தொகையான ஓட்டு மார்க்குச் சிமெந்தும, பேர்பெற்ற மங்களூர் ஓடுகளும், இரட்டை யானை மார்க்கு ஓடுகளும் விலைக்கிருக்கின்றன. வந்து பாருங்கள்.

யோசேப் அன் கம்பேனி,
தேவரீர்க்குளத்துக்கு முற்பக்கம்,
யாழ்ப்பாணம்.

விஜய சீலம்.

மேற்கண்ட பெயரினையுடைய ஒரு சிறந்த நவீன கதை, "வீரசிங்கன் கதை" "உதிர பாசம" முதலியவற்றின் ஆசிரியராகிய சி. வை. சின்னப்பாபிள்ளையவர்களால் சாதாரண வசனரூபமாக இயற்றப்பட்டு வெளிவந்திருக்கின்றது. இதன் பெருமை இதனை வாசிப்போர்க்கே நன்கு விளங்கும்.

வண்ணை ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திரசாலையிலும் வண் கிழக்கு சி. வை. சின்னப்பாபிள்ளையிடத்திலும் விலைக்குப் பெற்றுக்கொள்ளலாம.

விலை பிரதி ௧-க்கு ரூபா ௧.

இலங்கை, இந்தியா தபாற் செலவு சதம் ௩௫.
தொலைவாய்ப்பகுதிக்கு ,, ,, ௯௫.

இந்துஸ்தான் ஐக்கிய விமாக் கம்பனி.

இதன் பிரதான ஆபீஸ்: இந்துஸ்தான் கட்டடம், கல்கத்தா.
இதன் மூலதனம் பத்துக்கோடி ரூபா.
இந்தியாவிலே பங்காளிகளுக்கு அதிகலாபத்தைக் கொடுக்கக்கூடிய கம்பனி இதுவன்றி வேறில்லை.
சனங்களின் சொந்தமாயுள்ள விமாக்கம்பனி இதுவொன்றே.

இதில் விமாத்தீர்பவர்களுக்கு ஒருபோதும் நட்டம் வரமாட்டாது. அவர்கள் இக்கம்பனிக்கு வரும் லாபத்திலும் பங்குடையவர்களாவார்.

ஆண் பெண் என்னும் வித்தியாசமும், பயண வித்தியாசமும், தொழில்வித்தியாசமும், மரண வித்தியாசமும் இக்கம்பனியாரால் கவனிக்கப்படமாட்டாது.

பணங் கட்ட முடியாது தங்கள் "பொலிசிகளை" விட்டுவிடுவோர்க்கு மற்றக் கம்பனிகள் கொடுக்கும் தொகையிலும் பெருந்தொகை உடனே கொடுக்கப்படும். அல்லது அவர்களின் மரணத்தின்பின் அவர்களாற் குறிக்கப்படுவோர்க்குக் கொடுக்கப்படும்.

பணங்கட்டாதுவிட்ட "பொலிசி"களைக் காலவரையின்றி நினைத்தநேரத்திற் புதுப்பித்துக் கொள்ள இடங்கொடுக்கப்படும்.

கட்டப்படும் பணம் ஆருக்குக் கொடுக்கப்படவேண்டுமோ அவருடைய சொந்த வீட்டில் அது கொடுக்கப்படும்.

உத்தியோகஸ்தருள்ளும் சங்கத்திலும் தலைந்தரமான பிரபுக்களிருக்கிறார்கள்.

இக்கம்பனிக்குக் கட்டவேண்டிய தொகை சிறிது, லாபமோ அதிகம்.

இக்கம்பனியிலும்பார்க்க ஒருவனின் சுயவிருத்திக்கு ஏற்றதாகத் தோற்றுமெதுவும் அனுப்புதலுக்கும் நட்டத்துக்கும் ஏதுவானதாகவேயிருக்கும்.

இக்கம்பனிக்கு அக்கிராசனாதிபதி: கௌரவ மகாராஜா மகிந்திரசந்திரநந்திபகதூர்.
செகிறித்தெறி: சுரேந்திரநாத்தகூர் B A, ஜமீந்தார்.
மற்றைய விபரங்கள் பின்சொல்லப்படுகிறவர்களுக்கு எழுதி அறிந்துகொள்ளலாம்.

(பருத்தித்துறைப்பகுதிக்கு முகாமைக்காரன்)
ம வே திருஞானசம்பந்தப்பிள்ளை,
யாழ்ப்பாணம் இந்துகல்லூரித் தமிழ்ப்பண்டிதர்,
வண்ணார்பண்ணை.

புறொக்சர் M. A. தம்பு,
பிரதான முகாமைக்காரன்,
1 கெயிசர் தெரு, 13 B, 1-ம் குறுக்குத்தெரு,
கொழும்பு.

மெஸ். E. A. கூர்ணல், பிரயாணமுகாமைக்காரன்.

P. S. விமாத்தீர்ந்தவர்கள் தாங்கள்கட்டவேண்டியபணத்தை நேரே எங்களுக்கு அனுப்பவேண்டும். யாழ்ப்பாணத்திலே முகாமைக்காரர் நியமிக்கப்படாத இடங்களுக்கு முகாமைக்காரர் தேவை.

பத்திரக்கிரய வரவு.

ஸ்ரீ.	ரூ. ச.
சிவ. தெம்பரக்குருக்கள், உடுப்பிட்டி.	4-50
T. சபாரத்தின ஐயர், முல்லைத்தீவு.	6 50
க. முருகேசபிள்ளை, மாத்தளை.	5-50
சி. வீரவாகு, மாசார்.	4-50
மு. வைத்திலிங்கம், மாகோ.	3-00
M. S. சின்னையா, Dolosbage.	3-25
A. சண்முகம்பிள்ளை, மட்டக்களப்பு.	3-25
A. H. Egan, Galle.	1-50

இந்துசாதனம்.

யாழ்ப்பாணம்:-கள ௵ ஆனி௴ ௧௨.

சுப்பிரமணியக்கடவுள்.—௧௨.

சமய ஆரோகண முறை.

வேடர்களிடத்தே அவர்கள் அறியாமை காரணமாகத் தோற்றிய சுப்பிரமணிய வணக்கம், பின்னர் அறிவிற்றிருந்தினோர்பாற்சென்று நாகரிகவடிவு படைத்ததென்பது சில நவீனசமயிகள் கருத்து. நாம் யாதொரு கொள்கையை யாவது எமது விருப்பமாத்திரையால் நாட்டிவிடுவது கூடாது. இந்த நவீன சமயிகளுக்குச் சுப்பிரமணிய வணக்கத்தை வேட வணக்கமாகக் காட்டிவிடுதல் வேண்டும் என்னும் விருப்புப் பெரிதும் இருக்கலாம். ஆனால் அந்த விருப்பமாத்திரையால் அவர்களுடைய கொள்கை தாபிக்கப்பட்டுவிடமாட்டாது. அந்தக் கொள்கையைத் தாபித்தற்குத் தக்க ஆதாரம் வேண்டப்படும். இங்ஙனமான ஆதாரம் யாதாயினும் உண்டோ? வேடர்களும் தமது குலாசாரப்படி சுப்பிரமணியக் கடவுளை வணங்கிவந்தமையால், அவர்களிடத்திற்றானே அவ்வணக்கம் உற்பத்தியாயிற்று என்று சொல்வது சிறிதுங் கூடாது. வேடர்களும் கடவுள் ஒருவர் இருக்கின்றார் என்று விசுவசித்தலால், கடவுள் விசுவாசம் வேடர்களிடத்திற்றானே உதித்ததென்று ஒருவரும் சொல்லத் துணியமாட்டார்.

வேடர்கள் தமது அறியாமை காரணமாக ஒரு வனதேவதையை வணங்கி வந்தாராயின், அவ்வணக்கத்தை நாகரிகமுடையார் கைக்கொள்வது கூடாது. இந்தக்காலத்திலும் அநாகரிகம்பற்றி அறியாச்சனங்கள் அநுசரித்து வரும் உருவ வணக்கங்களை அறிவிற்றிருந்தினோர் கண்டித்தொதுக்குவது பிரத்தியட்சம். ஆகவே யாதொரு வணக்கத்திலாவது உண்மைச் சமயத்துக்குரிய அடையாளம் காணப்பட்டாலன்றி அதனை நாகரிகமாக்கள் கைக்கொள்ளமாட்டார் என்பது நன்குபோதரும். சுப்பிரமணிய வணக்கம் ஒருகாலத்திலே வேடரிடத்துமாத்திரமே காணப்பட்டதென்று நாம் ஒத்துக்கொண்டாலும் அந்த வணக்கத்திலே உண்மைச்சமயத்துக்குரிய அடையாளம் இல்லையாயின் அதனை நாகரிகமாக்கள் கைக்கொண்டிருக்கமாட்டார் என்பது யாரும் சொல்லத்தக்கதாம்.

இனி, கடவுள்வழிபாடு ஆதியில் வேடர் முதலிய அநாகரிகமாக்களிடத்திற்றானே உற்பத்தியாய்ப் பின்னர் அவர்களால் நாகரிகமாக்களுக்கு அளிக்கப்பட்டதென்பது உலகத்திலுள்ள எந்தச் சமயத்துக்காவது உடன்பாடாகமாட்டாது. கடவுளால் ஆதியிற்சிருட்டிக்கப்பட்டார் அநாகரிகரேஎன்றும், அந்த அநாகரிகர்தாமே காலாந்தரத்தில் நாகரிகமுற்றார் என்றும் நாம்கொள்வது தேவநிந்தையாகும். கடவுளால் ஆதியில் சிருட்டிக்கப்பட்டார் நாகரிகரே என்றும், அவர்களுக்குக் கடவுள் ஒருசமயத்தைக் கொடுத்தருளினார் என்றும் நாம்கொள்வதுண்டானால், நாகரிக வணக்கமே காலாந்தரத்தில் அநாகரிக வடிவு படைத்ததென்பதன்றி, அநாகரிக வணக்கத்திலிருந்து நாகரிகவணக்கம் ஆரோகணமுறையால் அமைந்ததென்பது ஒருசிறிதும் இயைபுடைத்தாகமாட்டாது.

ஆனால் உண்மைச் சமயத்திலிருந்து படிமுறையே அவரோகணித்துக் கீழ்நிலை எய்திய சமயங்கள், மீட்டொருகால மேல்நோக்கி ஆரோகணித்தலும் உண்டு. இந்த ஆரோகணமுறை எங்ஙனம் என்பதைச் சமயக்கிரமங்களிற் பயின்று உண்மைச் சமய அறிவு தலைப்பட்டோர் நன்கு விளக்கிக் காட்டுவர். சமயங்கள் ஆரோகண முறையால் திருத்தம் பெறுவது இரண்டுவகைப்படும். ஒன்று, லௌகிக ஆரோகணம். (Material refinement); மற்றது தைவிக ஆரோகணம் (Spiritual refinement) லௌகிகஆரோகணம் காலந்தோறும் தேசந்தோறும் பலபேதப்படும். ஒருகாலத்தவரால் அல்லது ஒருதேசத்தவரால் நாகரிகம் என்று கொள்ளப்படுவது, பின்னொரு காலத்தவரால் அல்லது பின்னொருதேசத்தவரால் அநாகரிகம் என்று ஒதுக்கப்படும். இது அவரவர் லௌகிக அறிவுக்கும் லௌகிக விருப்புக்கும் தக்கவாறும். சிகையை வளர்ப்பது ஒருகாலத்தில நாகரிகமாக மதிக்கப்பட, பின்னொருகாலத்திலே அது அநாகரிகமாக எண்ணப்படும். அங்கி தரிப்பது ஒருதேசத்தக்கு நாகரிகமாகத் தோன்ற, உத்தரியந்தரிப்பது பின்னொரு தேசத்துக்கு நாகரிகமாகத் தோன்றும். இவ்வாறான லௌகிகபேதங்கள்கொண்டு ஒரு சமயத்தின் உயர்ச்சியை நிச்சயித்தல் கூடாது. சமயங்களிற் காணப்படும் தைவிக நெறியாகிய பதிஞானத் துறைகளை அனுட்டானத்துக்குக் கொண்டுவருமிடத்து அவைகள் அந்தந்தச்சனங்களது அறிவளவாகவும் ஆசாரத்தளவாகவும் லௌகிக வடிவு புனையப்பெறுமாயினும், இந்த வடிவால் சமயங்களிற் பிரதிபாதிக்கப்படும் பதிஞானத்தின் சிறப்பை நிச்சயித்தல் கூடாது. ஆனால் பதிஞானத் துறைகள்புனையப்பெறும் லௌகிகவடிவு காரணமாக, அந்தத் துறைகள் காலாந்தரத்திலே மறைந்து விகாரப்படுவதுமுண்டு. இந்த விகாரங் காரணமாக ஒருகால் மிக உயர்ந்தநிலையில் இருந்த சமயம் பின்னர் மிகத் தாழ்ந்தநிலையிலுங் காணப்படும். இங்ஙனம் தாழ்ந்த கீழ்நிலையில் இருந்து யாதொரு சமயம் பின்னர்த் தனது பதிஞானபோதனையில் ஏற்றமுறுமாயின், அதனையே அச்சமயத்தின் தைவிக ஆரோகணம் என்று சொல்லத்தக்கது.

இந்தச் சமய பரிணாமமுறை கொண்டு சுப்பிரமணிய வணக்கத்தைப் பரீக்ஷிக்குமிடத்து, இவ்வணக்கம் வேடவணக்கத்திருந்து தோன்றியதாயின், இது லௌகிக ஆரோகண முறையாற் றோன்றிற்று அல்லது தைவிக ஆரோகண முறையாற் றோன்றிற்று என்பதை நாம் சிந்தித்தல் வேண்டும். இதோதா லௌகிக ஆரோகணமே எனின், அதைக் குறித்து நாம் ஆட்சேபிக்கமாட்டேம். வேட்டுவருடைய லௌகிக ஆசாரத்துக்கும் நாட்டவருடைய லௌகிக ஆசாரத்துக்கும் தம்முண் மிகப் பேதமுண்டாதலின், இவ்வணக்க முறையினும் அப்பேதங் காணப்படுதலேவேண்டும். ஆனால் இந்த ஆரோகணம் தைவிகமாகிய பதிஞானத்துறை அளவினும் சாதிக்கத்தக்கதோ என்பதே நாம் சிந்திக்கவேண்டியது. இப்போது நம்மவருட் காணப்படும் சுப்பிரமணிய வணக்கத்திலே பதிஞான விலாசம் பெரிதும் உண்டென்பது யாரும் சொல்லத்தக்கது. வேட்டுவ வணக்கத்திலே அது சிறிதேனும் இல்லை. பதிஞான மரபு சிறிதேனும் இல்லாத வேட வணக்கத்திலிருந்து, அந்த மரபு பூரணமாய் அமையப்பெற்ற நாகரிகவணக்கம் சித்திக்கத்தக்கதோ என்பதே நாம் சிந்திக்கவேண்டியது. வேட வணக்கமே சுப்பிரமணிய வணக்கத்துக்கு உற்பத்தித்தானமாயின், அது பதிஞானம் நிறையப்பெற்ற சுத்த சமயத் துறையில் இடம்பெறுவது கூடாது. பதிஞானக் கிரமத்தை அதிக்கிரமித்த சுத்த சமயத்துறை, அந்த ஞானம் சிறிதும் இல்லாத லௌகிக வணக்க மரபைக் கண்டித் தொதுக்குவதன்றி, அந்த வணக்கத்திருந்து தான் பரிணமிப்பது புலி பசுவை ஈன்றது என்பதுபோலும் ஓர் ஆபாசமாம். ஆகவே வேடவணக்கத்திருந்து சுப்பிரமணிய வணக்கம் ஆரோகணித்ததன்றென்பதும், சுத்த தைவிக சுப்பிரமணிய வணக்கத்திலிருந்தே வேடவணக்கம் காலாந்தரத்தில் தைவிக கோலத்தை நீத்து அவரோகணித்திறங்கியதென்பதும் இனிது போந்திடும் என்க. இதுவே உண்மைத்துணிபென்பது வேடருடைய சரித்திரங்களை எடுத்துக்கூறும் புராணங்களுக்கு வெகுகாலத்துக்கு முந்திய வேதங்களிலும் ஆகமங்களிலும் சுப்பிரமணியவணக்கம் பதிஞான முறையை அனுசரித்து எடுத்துக் கூறப்பட்டிருப்பதாலும், வேடசேரியிற் சுப்பிரமணியப்பெருமான்செய்தருளிய திருவிளையாடல்களில் பல தத்துவார்த்தங்கள் அமைந்து கிடத்தலானும், அந்தத் திருவிளையாடல்களையெல்லாம் சிறிதும் உலோபமின்றி சுத்த சமயத் துறைகளினமைந்த ஞானிகள் எல்லாம் உச்சிமேற்கொண்டு பாராட்டுவதாலும், முருகன், கந்தன், சேய் முதலிய தத்துவார்த்தங்கள் அமைந்த திருநாமங்கள் கொண்டே வேடர்கள்தாமும் சுப்பிரமணியப் பெருமானை அழைத்துவந்தமையாலும் இனிது காட்டப்படும் என்க.

சுப்பிரமணிய வணக்கத்திலே இப்போது காணப்படும் தத்துவார்த்தங்களாகிய பதிஞானத்துறைகள் எல்லாம் பிற்காலங்களிலே அதனுட் புகுத்தப் பட்டனவெனக்கொள்ளலாகாதோவெனின், இந்தத் தத்துவ ஞானத்துறைகள் மிகப் புராதனமாகிய வேதாகமங்களிற் காணப்படுதலால்அங்ஙனம்கொள்வதுகூடாது அன்றியும் தத்துவஞானத்துறைகளின் அருமையை அறிந்தார் அவற்றுக்கு ஒருசிறிதும் அருகமில்லாத வேட வணக்கத்துள் அவற்றைப்புகட்டமாட்டார்என்க. வேடவணக்கத்திற்றானும் அந்தத் தத்துவஞானத்துறைகள் அதிசூக்குமமாக அமைந்திருத்தல் பற்றியே, அவற்றை மெய்ஞ்ஞானிகளாகிய திருஞானசம்பந்தர் அருணகிரிநாதர் முதலியோரும், அகத்தியர் முதலிய முனிவரும் எடுத்துத் தோத்திரஞ்செய்வாராயினர்.

எங்கள் சைவசமயத்திற் காணப்படும் பல ஞானார்த்தங்களை இக்காலத்துள்ள சில நூதன விவேகிகள், கிறிஸ்து மதத்தின்கண்ணும் நுழைக்கத் துணிவாராயினும், அந்தச் சமயம் அந்த ஞானார்த்தங்களை ஏற்றற்குரிய தகுதியுடைத்தன்றென்பது சமய விஞ்ஞையிற் சிறந்த உத்தமர்களுக்கு நன்கு புலப்படும். அல்லாமலும் இந்த அர்த்தங்களை அது அடக்கியுள்ளதென்று உண்மைநிலைகண்ட மெய்ஞ்ஞானிகள் எவராமது இதுகாறும் சொல்லியதில்லை. சுப்பிரமணியவணக்கத்துக்கு இந்த ஞானார்த்தங்கள் எல்லாம் பெரிதும் ஏறபுடையனவாக இருத்தலானும், இந்த ஞானார்த்தங்கள் அதன்பாலுண்டென்று உண்மை ஞானிகள் எல்லாம் அறுதியிட்டுக்கூறியிருத்தலானும் அதனை அநாகரிகவணக்கம் என்றுவது, அநாகரிக வணக்கத்தின் ஆரோகணம் என்றுவது கொள்வது ஒருசிறிதும் கூடாதென்க.

கிறிஸ்துவின் போதனை.

(Communicated.)

௮. "நீங்கள் குற்றவாளிகள் என்று தீர்க்கப் படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகள் என்று தீராதிருங்கள்" (மத்-எ-க) என்று கிறிஸ்து போதித்தார். இந்தக் காலத்திலே நீதித் தலங்களிலே குற்றஞ்செய்தோரைக் குற்றவாளிகள் என்று தீர்ப்பிடும் நீதிபதிகள் எல்லாம் கிறிஸ்துவால் குற்றவாளிகளாக்கப்படுவோர்களோ! அம்மம்ம!! இதுவன்றோ நீதி! உலகத்திலே நீதியைப் பரிபாலித்தற்கு நாம் கூசுவதுண்டெனில் உலகம் என்படமாட்டாது?

"நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள்" (மத்-எ-உ) என்பது யேசுவுடைய அடுத்த வாக்கியம். குற்றஞ்செய்தானைக் குற்றவாளி என்று தீர்ப்பிட்டால், அங்ஙனம் தீர்ப்பிடுவோனும் அக்குற்றவாளியைப் போலவே தீர்ப்பிடப்படுவோனும்!! "ஒரு கன்னத்தில் அடித்தால் மற்றக் கன்னத்தையும் திருப்பிக்கொடு" என்று முன்னே சொன்னார். இப்போது ஒருவன் குற்றஞ் செய்தாலும் அவனைக் குற்றவாளி என்று சொல்லாதே என்கிறார். உலகத்திலே யேசுவுடைய இந்தநீதி பரிபாலிக்கப் படுமாயின் உலகம் எங்கும் கள்வரும் குறும்பு செய்வோரும் அதிகப்பட்டு உலகத்துக்குப் பெருங் கேடாய் முடியும் என்பது நாம் சொல்லிக்காட்ட வேண்டியதில்லை.

அப்படியல்ல, யேசுவுடைய கருத்தெல்லாம் ஒருவனை நியாயநெறிக்கு மாறாகக் குற்றவாளியாக்கப்படாது என்பதேயாம் எனின், அவருடைய வாக்கியம் அந்தப் பொருள் சிறிதும் பயவாது இருக்கும்போது இப்படியானதொரு பொருளை அவருடைய வாக்கியத்துக்கு அமைத்துக் காட்டுவது எங்ஙனம் பொருந்தும்? அல்லாமலும் அவருடைய அடுத்த வாக்கியங்களிலிருந்து ஒருவரையும் ஒருவாற்றாலும் குற்றவாளியாக்கப்படாது என்பதே அவருடைய கருத்தாம் என்பது நன்றாகப் புலப்படத்தக்கது. "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (மத்-எ-௩) என்கிறார். ஆகவே நீயும் குற்றவாளியே ஆதலால், நீ மற்றவனைக் குற்றவாளி யாக்காதே என்பதே அவருடைய கருத்தென்பது நன்றாகவிளங்குகின்றது. ஒருவன் தான் குற்றவாளி யாதலால் மற்றவன் செய்த குற்றத்தையும் பொருட்படுத்தப்படாது என்பது எந்ததேசத் தருமநெறிக்கும் சிறிதும் அடுக்காதென்க.

௯. "பரிசுத்தமானதை நாய்களுக்குக் கொடாதேயுங்கள்" (மத்-எ-௬) என்பது கிறிஸ்துவுடைய மற்றொரு போதனை. இந்தப் போதனையால் கீழ்மக்களுக்கு நற்போதனைசெய்தல் கூடாதென்பது இவர் கருத்து. இங்ஙனமாயின கீழ்மக்களைத் திருத்துமுறை எங்ஙனமாமோ? கீழ்மக்களைத் திருத்துதற்குரிய யாதொரு முறையை இவர் எங்கேயாவது போதித்ததுண்டா? பாவிகளுக்காகவே பிறந்தார் என்று சொல்லப்படும் யேசு பாவிகளுக்கு நற்போதனையைப் போதியாதிர்கள என்கிறார். இங்ஙனமானால் இவர் பாவிகளுக்காகவே பிறந்தார் என்று சொல்லப்படும் கதை என்படுமோ?

௧௦. "பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பானே யல்லாமல், என்னைநோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே!! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிக்க மாட்டான். அந்நாளில் அநேகர் என்னைநோக்கிக் கர்த்தாவே! கர்த்தாவே!! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள். அப்போது நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை. அக்கிரமக் காரர்களே என்னை விட்டு அகன்று போங்கள் என்று சொல்லுவேன்" (மத்-எ-௨௧-௨௨) என்கிறார்.

இந்த வாக்கியத்தைக் கண்டுவைத்தும் கிறிஸ்துவைக் கடவுள் என்று சாதிப்பது எப்படியோ? அவர்தாமே தமதுவாயினாற் றானே தாம் கடவுளல்லஎன்று அறிக்கையிட்டிருக்கும்போது அவரைக் கடவுளாக்கிவிட இந்தக் காலத்துள்ள கிறிஸ்தவர்கள் மிகப் பிரயாசப்படுவது என்கருதியோ? அல்லாமலும் இவரில் பூரண நம்பிக்கைகொண்டு இவருடைய நாமத்தினாலே பல பல அற்புதங்களைச் செய்தவர்களைத் தானும் இவர் இறுதியில் கைவிட்டுவிடுவார் என்று இவர்தாமே சொல்லும்போது, இவரை நம்பி இரட்சணியம் பெறக் காத்திருப்போர் பாடெல்லாம் இலவுகாத்த கிளியின் கதியேயாகும் என்க.

௧௧. "அநேகர் கிழக்கிலும் மேற்கிலும் இருந்துவந்து பரலோக இராஜ்யத்தில ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபுஎன்பவர்களோடு பந்தி இருப்பார்கள். இராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இடத்தில் தள்ளப்படுவார்கள்." (மத்-அ-௧௧-௧௨) என்றார்.

பரலோக இராச்சியம் பந்தியிருத்தற்குரியதோர் இடமாமோ? இந்த வாக்கியத்திலிருந்து கிறிஸ்து மோட்சத்தைக் குறித்து விளங்கியிருந்த விளக்கம் பெரிதும் அபத்தமானதென்பது நன்றாகப் புலப்படுகின்றது. ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபு என்பவர்கள் மோட்சசாம்பிராச்சியத்துக்குரிய புண்ணிய புருஷர்கள் தாமோ என்பது முதற்கேள்வி. இவர்களுடைய ஜீவிய சரித்திரத்திலிருந்து இவர்களைப் புண்ணிய புருஷர் என்று கொள்வதற்குச் சிறிதும் இடமில்லை. ஆனால் இவர்களைப் புண்ணியபுருடர்என்று கிறிஸ்து மதித்தமையால், புண்ணியபுருடர்களுடைய இலக்கணந்தானும் இவருக்குத் தெளிவுற விளங்கியிருந்ததில்லை என்பதும், இவர்களுக்கு மோட்சம் உண்டென்பது நிச்சயமாமென்று இவர் நம்பியிருந்தமையால இவருடையவிளக்கம்பூரண ஞானமுடையதன்றென்பதும் தெற்றெனப்புலப்படும். இனி இவர்கள் புண்ணிய புருஷர்களாயினும், இவர்களுக்குக் கிடைத்தற்குரிய மோட்சம பந்தியிருத்தற் குரியதோர் தானமாயின், அது நித்தியம் எனப்படமாட்டாதென்பதும், எனவே கிறிஸ்துவுக்கு மோட்சத்தைப் பற்றிய விளக்கந்தானும் சரிவர அமைந்திருக்கவில்லை என்பதும் நன்றாக அறியக்கிடக்கின்றன.

இனி "இராச்சியத்தின் புத்திரர் புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள்" என்கிறார். எனவே இராச்சியபரிபாலனஞ்செய்வாரது கதி எல்லாம் நித்திய நரகமே என்பது இவரது கொள்கையாகப் புலப்படுகின்றது. இங்ஙனமாயின் இந்தக் காலத்திலே இராச்சியம் செய்யும் கிறிஸ்த அரசர்கள்தாமும் நரகத்திற்றானே சென்று புகுவார் என்பது இவர் கருத்தாக இருக்கின்றது. இராச்சியபாரந் தாங்குவது நரகத்துக்கு

வழிகாட்டியாகும் எனின் இக்காலத்துள்ள கிறிஸ்த குருமார் இந்த இராச்சிய பாரத்தைச் சுமத்தலின்றி அதற்குப் பெருந்துணையாயிருப்பது என்கருதியோ?

சமாச்சாரம்.

சிதம்பர க்ஷேத்திரம்:—இம்மகா புண்ணிய க்ஷேத்திரத்தில் ௧௯-ம் ஆனி௴ கொடி துவஜாரோகணமாகி மகோற்சவம் நடைபெறும். ௨௮ இரதோற்சவமும் ௨௯ யாகிய ஆனி உத்தர புண்ணியதினத்தில், ஸ்ரீ நடராமூர்த்திக்கும் ஸ்ரீ சிவகாமசுந்தரி யம்பாளுக்கும் ஆனித்திருமஞ்சன மகாபிஷேகமும் மகாதரிசன மகோற்சவமும் நடைபெறும்.

ஸ்ரீ சபாரத்தின முதலியாரவர்கள்:—சமாதான நீதிவான் (J. P.) பட்டமளிக்கப்படுமாறு கொழும்புக்கு அழைக்கப்பெற்ற ஸ்ரீ சபாரத்தின முதலியாரவர்கள் தேசாதிபதியவர்களால் பட்டமளிக்கப் பெற்றபின் கதிர்காம யாத்திரை செய்து யாழ்ப்பாணம் திரும்பினர்.

ஸ்ரீ சின்னையா முதலியா ரவர்கள்:—இராசவாசல் முதலியார்ப்பட்ட மளிக்கப்பட்டிருந்திருப்பர் ஸ்ரீ. சின்னையா முதலியாரவர்கள் சுகவீனத்தின் பொருட்டு கொழும்புக்குச் செல்ல இயலாதுபோனமையால், யாழ்ப்பாணம் கச்சேரியிலே அவரது பட்டத்துக்குரிய வாளும் பட்டியும் சென்ற சனி ஏசன்றர் மெஸ். ஹோர்ஸ்பேர்க் அவர்களால் கொடுக்கப்பட்டன.

சிலப்பதிகாரம்.—ஸ்ரீமத். அ. குமாரசுவாமிப் புலவரவர்கள் ஷை நூலைக் குறித்து வண்ணார்பண்ணைச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் வருகிற புதன்கிழமை சாயந்தரம் ஓர் பிரசங்கஞ் செய்வார்கள்.

விவாகம்:—யாழ்ப்பாண மணியகாரன் ஸ்ரீ. வீ. எம. முத்துக்குமாரு அவர்கட்கும புலோலியிற் பிரபலமுற்று விளங்கிய ஸ்ரீ. கதிரேசசெட்டியாரது புத்திரியும் நல்லூர் ஸ்ரீ. கந்தசாமி வைத்தியரின்சகோதரியுமாகிய ஸ்ரீமதி. சிவலோகநாயகி யம்மாளுக்கும சென்ற வியாழக்கிழமை இரவு நிகழ்ந்த சுபமுகூர்த்தத்தில் விவாகம சிறப்புற நடைபெற்றது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களையும பெற்று இன்புற்று இனிதுவாழ்வாராக.

கோப்பறு:—இது இப்பொழுது கண்டி யொன்று ௧௪ ரூபா வரையில் விலைப்படுகின்றது.

வள்ள அபாயம்:—சென்ற [illegible] பூநகரியிலிருந்து வைக்கோலேற்றிவந்த ஓர் வள்ளம் தண்ணீர்கோலிக் கவிழ்ந்துவிட, அதிலிருந்தவர்கள் வைக்கோல் கட்டுகளின் துணைகொண்டு சிவமோசமுறாது கரைசேர்ந்தனர்.

முளாய்ச் சைவப்பிரகாசவித்தியாசாலை:—இவ்வித்தியாசாலையிலே சென்ற பௌர்ணிமையின்று பண்டிதர் ஸ்ரீ. பொன்னம்பலபிள்ளையவர்கள் சிவசாருண்ணியத்தைப்பற்றி ஓர் சிறந்த பிரசங்கஞ்செய்தனர். ஸ்ரீ. இராமசாமிப்பிள்ளையும், ஸ்ரீ. கந்தையாபிள்ளையும், ஸ்ரீ. கணபதிப்பிள்ளையும், ஸ்ரீ. நாகேந்திரபிள்ளையும், ஸ்ரீ. நாகலிங்கபிள்ளையும் குறிப்புரை கூறினர்கள். சடித.

அபாயமரணம்:—சென்ற ௧௨-ம் திகதி பகல் வீசிய சுழல்காற்றுக் காரணமாக, யாழ்ப்பாணக் கன்னியாஸ்திரி மடத்துக்கு அணித்தாக ஓர்பனைமரம் சமீபத்திலிருந்த ஓர் வீட்டின்மீது வீழ்ந்து அவ்வீட்டுமுகட்டை முரித்து உள்ளே படுத்திருந்த ஐந்து ஆறு வயதுள்ள ஓர் சிறுவன்மீது விழவே அவன் உயிர் துறந்தனன்.

—இணுவிலிலே சின்னபாஅம்பலவியென்னுமொருவர் தனது வளவுகிணற்றில் தண்ணீர் மொள்ளச் சென்றபோது தற்செயலா யதனுள் வீழ்ந்து இறந்துவிட்டனர்.

பின்னுமோ ரபாய மரணம்:—கெருடாவிற்கிழக்கில் நாகன் கந்தனென்பவன் ஓர் பனையில் ஓலைவெட்ட ஏறியபோது தவறிவீழ்ந்து உடனே உயிர்துறந்தனன்.

யாழ்ப்பாணம் புகைக்கப்பல் கம்பேனி வழக்கு:—யாழ்ப்பாணம புகைக்கப்பல் கம்பனி குலைந்தபோது அக்கம்பனியில் மீதியாயிருந்த பணத்தைப் பங்காளிகளுக்குப் பிரித்துக்கொடுக்கும்படி நியமிக்கப்பட்டவர்கள் பங்காளிகளுக்குப் போகவேண்டிய தொகையிலும மேலதிகமாகத் தாம தப்பிதமாகக் கொடுத்துவிட்டார்களெனச்சொல்லி முதன்முதல் பங்காளிகளிலொருவராகிய கந்தர்மடம ஸ்ரீ. ரு. ம. வேலுப்பிள்ளையவர்களுக்கு விரோதமாகத் தாம தவறாகக் கொடுத்துவிட்ட பணத்துக்கு ஓர் வழக்குக் கொண்டுவந்தார்கள். இவ்வழக்கு டிஸ்திறிக்கோட்டில் விளக்கப்பட்டபோது நீதிவான் எதிரி பக்கம தீர்ப்புச்செய்தார். இப்போது சுப்பிறீங்கோட்டார் வழக்காளிகளுக்குச் சார்பாய் எதிரிக்குக் கொடுக்கப்பட்ட மேலதிகமான பணத்தைத்திருப்பிக் கொடுக்கவேண்டுமெனத் தீர்ப்புச்செய்திருக்கிறார்கள்.

தென்மராட்சி மணியமவர்களுக்குச் செய்யப்பட்ட உபசாரம்.—தென்மராட்சி மணியகாரன் ஸ்ரீ. முத்துக்குமாரசாமி முதலியாரவர்களுக்கு முதலியார்ப்பட்டமளிக்கப்பட்ட சந்தோஷத்தின் காரணமாகச் சென்ற சனிக்கிழமை சாயந்தரம் சாவகச்சேரியிலே ஓர் விருந்துக்கொண்டாட்டம் நடத்தப்பட்டது. இதற்குப் பல திசைகளிலுமிருந்து பல பிரபுக்கள் சென்று சமுகமளித்தனர். இக்கூட்டத்திலே வடமாகாண ஏசன்றர் மெஸ் ஹோர்ஸ்பேர்க் அவர்கள், இந்துகாலீஜ் பிரதம ஆசிரியர் ஸ்ரீ. என் செல்வத்துரைப்பிள்ளையவர்கள் முதலாயினோர் மணியகாரனவர்களின் குணாதிசயங்களைப்பற்றி வியந்து கூறினர். அதிக யோக்கியதையும் திறமையுமுள்ள மணியகாரனவர்கள் மேலும பல பட்டங்களைப் பெற்றுச் சிறந்து வாழ்வாராக.

புதிதாய்ப் புகைரதப் பிரயாணஞ் செய்த ஓர் சிங்கள ஸ்திரீ:—கம்பளையில் ஓர் சிங்களவன் விவாகஞ்செய்து தனது பெண்ணை லேபேன் என்னும் குறிச்சியிலுள்ள தனது வீட்டுக்குக் கால்நடையாக அழைத்துச் சென்றான். அவனும மனைவியும மற்றவர்களும கால்நடையாகச் செல்ல இவனது தாய் முந்திச்சென்று இவர்களுக்குப் போசனமாயத்தஞ்செய்யு மநோக்கமாகப் புகைரதத்தில் ஏறிச்சென்றாள். இவள் முன் புகைரதத்தில் ஏறிப் பழகியிராதவளானதால் தான் இறங்கவேண்டிய ஸ்டேசனில் இறங்காது புகைரதம தனது வீட்டுக்குக் கிட்டச் சென்றபோது அதிலிருந்து குதித்தாள். குதித்தபோது அதிக நோவடைந்ததுமன்றிக் கோட்டுக்குக் கொண்டுபோகப்பட்டு அங்கே ௫-ரூபா அபராதம் விதிக்கவும பெற்றாள்.

பெல்மடுலா புகைரதப்பாதை வேலை:—பெல்மடுலாவுக்கும இரத்தினபுரிக்கு மிடையில் அரசாட்சியார் புகைரதப்பாதை திறக்க ஆரம்பித்து இப்போது ௮-மைல் வரைக்கும தண்டவாளம போட்டிருக்கிறார்கள். இன்னும ௯-மைலுக்குத் தண்டவாளம போடவேண்டும. இப்பாதை முழுவேலையும வருகிறவருஷத்தொடக்கத்தில் முடிவாகிப் புகைரதப்போக்குவரவு நடைபெறுமெனச் சொல்லப்படுகின்றது.

சிங்கப்பூர் அரசாட்சியாரும் யுத்தச்செலவும்:-சிங்கப்பூர்ச் சட்டநிரூபண சபையார் யுத்தச்செலவின்பொருட்டு ஐந்து வருஷங்களுக்கு வருஷமொன்றுக்கு இரண்டுலக்ஷம பவுண் தங்கள்தேச அரசிறை வருமபடியிலிருந்து கொடுத்து வரத் தீர்மானித்தார்கள். அரசிறை வரும்படி இடங்கொடுக்குமாயின் மேலுமைந்து வருடங்களுக்குக் கொடுத்து வரவேண்டுமென்றும தீர்மானித்தார்கள். இந்த யுத்தச் செலவின் பொருட்டு புகையிலை வரியையும் குடிவகை வரியையும உயர்த்த வேண்டுமென்றும தீர்மானித்தார்கள்.

தேனீகளுக்கு ஆகாரம் சேகரித்தல்.—ஸ்காட்லண்டிலும் வேறு சில இடங்களிலும் தேனீ வளர்ப்பவர்கள் புஷ்பங்களிலுள்ள மகரந்தப் பொடியை வாகுவம் க்ளினர் என்னும் ஒரு யந்திரத்தால் சேகரித்து தேனீக்களுக்கு ஆகாரமாகக் கொடுக்கிறார்களாம். சில இடங்களில் தேனீக்குஞ்சுகளுக்கு இதையே வெகுவாய் ஆகாரமாக உபயோகிக்கிறார்களாம்.

சிதம்பரம்
ஞானப்பிரகாச திருக்குளம்.

இத்திருக்குளப் படித்துறைத் திருப்பணித் தருமத்துக்குப் பொருள் உபகரித்தோர் பெயருந் தொகையும்:—

(46-ம் இலக்கப் பத்திரிகைத் தொடர்.)

நேரில் வரவு.

ஸ்ரீ.	ரூ. ச.
சித. மு. ப. சிதம்பரநாதச்செட்டியார், இந்துகாலீஜ் (Laboratory) கட்டடவேலைக்காறரால்.	20-00
வை. விநாசித்தம்பி, வண்ணார்பண்ணை. (முதன் முறை)	15-00
க. சுப்பிரமணியபிள்ளைமனைவி, ஸ்ரீமதி. தங்கம்மாள் வண்ணார்பண்ணை (முதன் முறை)	15-00
துரையப்பா, கோலாலம்பூர்.	1-50
சி. தர்மலிங்கம், ,,	1-50
கா. வயித்தியலிங்கபிள்ளை, சங்குவேலி. (முதன்முறை)	100-00
E. Mayilvahanam, Institute for Medical Research Kuala Lumpur, F. M. S.	10-00
	163-00

கொழும்பில் கா. தம்புவசூல் வரவு.

க. கயிலாயம், J. P. சிறுப்பர். (2-ம் முறை)	30-00
ச. வேலுப்பிள்ளை, கொந்திருத்துக் காரர். (முதன் முறை)	50-00
S. தம்பையா, புரோக்கர்.	50-00
T. முருகேசர்பெண் சிவகாமியம்மை.	25-00
க. இரத்தினசபாபதி, புரோக்கர்.	10 00
இ. செகராசசிங்கம், ,,	10-00
H. திருவிளங்கம், பிறக்டர்.	10-00
மு. குமாரசுவாமி, டாக்குத்தர்.	10-00
ம. முத்தத்தம்பி, புரோக்கர்.	20-00
K. சின்னத்தம்பி, வியாபாரம்.	10-00
இ. பொன்னையா, புரோக்கர்.	10-00
வி. பஞ்சாட்சரம், கிளாக்கு.	5-00
வை. சரவணமுத்து, முதலியார்.	5-00
C. T. கந்தையா, பிறக்டர்.	5-00
கா. செல்லையா, ,,	5-00
S. சரவணபிள்ளை, புரோக்கர்.	5-00
அ. செல்லமுத்து, ,,	5-00
சிவபாலன்	5-00
	443-00
முன் வெளிப்படுத்தியதொகை:	1822-99½
ஆகத் தொகை:	2255-99½

இங்ஙனம்,
நள௵ வைகாசி௴ ச. பொன்னம்பலவனர்.
சைவப்பிரகாச வித்தியாசாலை,
சிதம்பரம்.

தந்திச் சமாச்சாரம்.

(யுத்தசங்கதிகள்)

ஜூன்௴ 11௳.

மியூஸ் நதிக்கு இருபக்கங்களிலும் வேர்டனுக்கு வடக்கில் மும்முரமான குண்டுப்பிரயோகம் நடைபெறுகின்றது. ஜர்மனியர் எங்கேயாவது அனுகூலமடையவில்லை. 'வொரிஸ்பொப்பென்ற்' என்னுமிடத்தில் வாள்யுத்தம் செய்தபோது அவர்கள் முன்னேறிச் சென்றிருந்த இடங்களிலிருந்து அவர்கள் துரத்தப்பட்டுவிட பிராஞ்சியர் அவ்விடங்களுட் புகுந்தனர்.

ருஷியர் மேலும் 35,100 சேனைவீரரையும் ஒரு சேனாதிபதியையும் 400 உத்தியோகஸ்தர்களையும் 30 பீரங்கிகளையும் கைப்பற்றினர். 'சேர்னோவிற்ஸ்' என்னுமிடத்தில் ஜெனறல் லாறிற்ஸ்கி 18 000 பேரைப் பிடித்தார்.

ஜூன்௴ 12௳.

வேர்டனுக்கு வடக்கே காலாட்படைச் சண்டை நடைபெறவில்லை. 'தோமன்ற்' என்னுமிடத்திற்குத் தெற்கிலும் வோகோட்டைக்கு மேற்கிலும் ஜர்மனியரும் பிராஞ்சியரும் மாறிமாறிக் குண்டுகளைப் பொழிந்தனர். சாம்பேனில் மும்முரமான பீரங்கிச்சண்டை நடைபெறுகின்றது.

ஜர்மனியர் வேர்டன் சண்டையில் இதுவரை ஏறக்குறைய பத்துலட்சம் சேனாவீரரை மாளக்கொடுத்தனரெனச் சொல்லப்படுகின்றது.

யூபிறெஸை ஜர்மனியர் மும்முரமாய்த் தாக்கினர். 60-ம் இலக்க மலைக்கணித்தாயும் யூபிறெஸ் பட்டினத்தையும் மினின் றோட்டுக்குத் தென்பக்கத்திலுள்ள அகழ்களையும் அவர்கள் மும்முரமாய்த்தாக்கினார்கள்.

ஜூன்௴ 13௳.

சத்துருக்களின் ஆகாயக்கப்பல்கள் எகிப்திலே கன்டோரா றோமனி என்னுமிடங்களில் குண்டுகளை வீசின. கன்டோராவில் மிகச் சிறு சேதமுண்டாயிற்று. றோமனியில் ஒரு சேதமுமுண்டாகவில்லை.

பெல்ஜியத்திலிருந்தும், மேற்கு யுத்தபூமியிலுள்ள வேறு இடங்களிலிருந்தும் 1,20,000 ஜர்மன் சேனவீரர் 'செலுவெல்ற' என்னுமிடத்திற்கு அனுப்பப்பட்டிருக்கிறார்கள்

ஜர்மனியர் திரும்ப தோமொன் றக்கு மேற்கே எதிர்த்து 321-ம இலக்க மலைக்குக் கிழக்குப் பக்கத்திலே முன்னணியிலுள்ள சிலவிடங்களுட்புகுந்தார்கள். மற்றைய இடங்களில் பிரான்சுப் பீரங்கிகளுக்கு எதிர்க்க இயலாது அவர்கள் பின்காட்டினர்.

ஜூன்௴ 14௳.

சேர்னோவிற்ஸ் என்னுமிடத்துக்கு வடகிழக்கில் 20 மைலுக்கப்பாலுள்ள சினியாற்றின் என்னுமிடத்தை ருஷியா பிடித்தார்கள். இங்கே 6000பேர் மறியற்படுத்தப்பட்டார்கள். 16 பீரங்கிகள் எடுக்கப்பட்டன.

போல்றிக் கடலிலே 13 ஜர்மனிய வியாபாரக் கப்பல்கள் 3டிஸ்ரோயர் கப்பல்களினதும் ஒரு குரூயிசர்க்கப்பலினதும் சில றோலர்கப்பல்களினதும் காவலுடன் நின்றபோது ருஷிய டிஸ்றோயர்க் கப்பல்களும சப்மிறயின் கப்பல்களும் அவற்றைச் சந்தித்துச் சண்டை செய்து காவலிற் சென்ற கப்பல்களை சிதறண்ணச்செய்தபின் வியாபாரக்கப்பல்கள் கரைப்பக்கமாய் ஓடின. பல கப்பல்கள் நீரிலமிழ்த்தப்பட்டிருக்க வேண்டுமென எண்ணப்படுகின்றது.

ஜூன்௴ 15௳.

ஆர்மேனியாவுக்குள் ஓர் பிரான்சச்சேனை புகுந்தது. இதைப்பற்றி ஆர்மேனியர் ஆட்சேபித்த போது அச்சேனைத்தலைவர் தாம் செய்தது தவறெனச்சொல்லி மன்னிப்புக் கேட்டனர்.

பக்டாட் பக்கத்தில் கொக்கேஷயஸ் நாட்டில் துருக்கியர் திரண்டு சண்டைசெய்தபோது முன்னேறுதபடி தடுக்கப்பட்டனர்.

மெஸ். லோயிட்ஜோர்ஜ் அவர்கள் யுத்த செக்கிறிற்றெறி உத்தியோகத்தை ஏற்றுக்கொள்ளும்படி கேட்கப்பட்டிருக்கின்றனராம்.

அவுஸ்திரியர் அணி கெடுக்க நெருக்கப்பட்டு ருமேனிய எல்லைக்கு ஓடிப்போகின்றனர். சேர்னோவிற்ஸ பாலத்தைப் பிடிப்பதற்கு இருபகுதியாரும் கடும்போர் செய்கின்றனர்.

ஜூன்௴ 16௳.

அவுஸ்திரியர் தாங்கள் பிடித்த சனங்களையுங் கொண்டு சேர்னோவிற்ஸ் என்னும் இடத்தை விட்டு விலகிவிட்டனர். தென்பக்கத்திலிருந்த புகையிரதப்பாதை அழிக்கப்பட்டுவிட்டது.

சேர்னோவிற்சுக்குத் தென்கிழக்கில் 70 கட்டைக்கப்பால ருமேனிய எல்லையிலுள்ள டோர்ஜேனெற்ஸ் என்னுமிடத்துக்குப் பல புகைரதவண்டிகளில் காயப்பட்டவர்களை அவுஸ்திரியர் ஏற்றியனுப்பினார்கள்.

ருஷியர் மேலும் 100 உத்தியோகஸ்தர்களையும் 14,000 பேரையும் மறியற்படுத்தினர்.

தென்மேற்கு யுத்தபூமியில் அவுஸ்திரியருள் 3,00,000 பேர் மோசம்போனார்கள். ருஷியர் அவுஸ்திரியரைக் கலைத்துச்சென்று வொலினியா என்னுமிடத்தில் அவர்களின் முன்னணியுட் புகுந்தார்கள்.

'ஹாம்சயர்' என்னும் கப்பல் சுரங்கத்திலகப்பட்டு 15 நிமிஷத்தில் நீரிலமிழ்ந்தியதென்றும், கப்பலைவிட்டு இறங்குவதற்கு எல்லாரும் ஆயத்தமாய் நின்றார்களென்றும, லார்ட் கிச்சினர் கப்பித்தானுடைய வள்ளத்துக்குக் கிட்டநின்றாரென்றும், கப்பித்தான் வள்ளத்துவிறங்கும்படி லார்ட் கிச்சினருக்குச் சொன்னாரென்றும், ஆனால் லார்ட் கிச்சினர் வள்ளத்துவிறங்கினாரோ இல்லையோ என்பது தெரியவில்லையென்றும், வள்ளங்களொன்றும கப்பலைவிட்டுப் போகவில்லை என்றும், ஆனால் 3 கட்டுமரங்கள் கப்பலிலிருந்து வெளியே சென்றனவென்றும், அவை ஒவ்வொன்றிலும் 70 பேர்களிருந்தார்களென்றும் அவர்களெல்லாரும் ஆபத்துற்று இறந்துபோனார்களென்றும் கடலில் இடருதப்பினவர்கள் தெரிவிக்கின்றனர்.

சலோனிகாவுக்கு அனுப்பப்பட்ட 2 டிவிஷன் சேனைக்குப் பதிலாக ஐயன்சோலில் இத்தாலியருடன் யுத்தஞ்செய்ய 1 டிவிஷன் புல்கேரிய சேனை போயிருக்கின்றது.

ஜூன்௴ 17௳.

மியூஸிலே காலாட்படைச் சண்டை நடந்தது. டெட்மன் என்னுமிடத்திலே சத்துருக்கள் மும்முரமான குண்டுப்பிரயோகஞ்செய்தனர். டவுறி லொம்பிறிசயிட் என்னுமிடங்களுக்கு வடக்கே மும்முரமான பீரங்கிச் சண்டை நடைபெறுகின்றது.

ஈடின் என்னும் டிஸ்றோயர்க் கப்பல் இங்கிலிஷ் வாய்க்காலில் வேறொரு கப்பலோடு மோதுண்டு நீரிலமிழ்ந்திற்று. இதிலிருந்தவர்களுள் 30 பேர் மீட்கப்பட்டார்கள். 3 உத்தியோகஸ்தர்களைக் காணவில்லை.

ஜூன்௴ 18௳.

வேர்டனுக்கு வடக்கே 304-ம் மலையில் சத்துருக்கள் மும்முரமான பீரங்கிச்சண்டைசெய்தனர் காலாட்படைச்சண்டை நடைபெறவில்லை.

மோதம்பியிலே ஜர்மனியர் குண்டுகளைப் பொழிந்தபின் பலவிடங்களிலெதிர்த்து யுத்தஞ் செய்தார்கள். இவர்கள் அக்கினித்திராவகத்தைப்பாவித்தும் அதிக சேதமடைந்து பின்காட்டினர். தைமொன்றுக்கு வடக்கிலும் சத்துருக்கள் மும்முரமாய் எதிர்த்து யுத்தம் செய்து அதிக சேதமடைந்தனர்.

ருஷியரை லெம்பேர்க் என்னுமிடத்திற்குப் போகவொட்டாது சத்துருக்கள் பலபக்கங்களிலுமிருந்து துணைச்சேனைகளை வரவழைத்து அநேக இடங்களில் ஜெனறல் பிறஸிலோவ் என்பவரின்கீழ் நின்றசேனைகளை மும்முரமாயெதிர்த்துச் சண்டைசெய்தபோது அபஜயமடைந்து பின்காட்டினர்.

ருஷியர் கடும்போர் செய்து சேர்னோவிற்ஸ் என்னுமிடத்தைப் பிடித்தார்கள்.

பிரிட்டிஷ்முன்னணியில் சத்துருக்கள் அதிக மும்முரங் காட்டினர். யூலி உவில்ஜியன்னும் ஆர்மென்ரியேக்கிடையில் சத்துருக்கள் மும்முரமாய்க் குண்டுப்பிரயோகஞ்செய்தனர். வெஸ்ற்னஸ் என்னுமிடத்துக்கு மேற்கே நச்சுப் புகையைப் பாவித்தார்கள். ஆனால் சேதம் யாதுமுண்டாகவில்லை.

அஸியாகோ என்னுமிடத்துக்கு மேற்கே அவுஸ்திரியர் இத்தாலியரின் அணியைக் குலைத்துவிட எண்ணிக் கடும் யுத்தம்செய்து அதிக சேதமுற்றுப் பின்காட்டினர்.

ஜூன்௴ 19௳.

ஓர் பிரிட்டிஷ்சப்மெறயின்கப்பல் 'எர்ஸ்' என்னும்ஜர்மன் கப்பலை நீரிலமிழ்த்தியது. இதுகிறிஸ்தியேனியா வென்னுமிடத்திலிருந்து வியூகெம் என்னுமிடத்துக்குப் பயணம்பண்ணியது. இதிலிருந்தவர்கள் கரையையடைந்தார்கள்.

அல்பேர்ட் இளவரசரும் ஜஸ்லண்டில் நடந்த கடற்சண்டையில் சமுகமாய் நின்றாரெனச் சொல்லப்படுகின்றது.

சேர்னோவிற்ஸ் என்னுமிடத்தில் நேற்றைவரை 3000 பேர் பிடிக்கப்பட்டார்கள்.

ஜூன்௴ 20௳.

கொவிலுக்குத் தென்கிழக்கில் ஜர்மனியர் மும்முரமாய்க் குண்டுப்பிரயோகம் செய்ததன்றி மற்றைய இடங்களில் அவர்களது காலாட்படையும் பீரங்கிப்படையும் அமைதியுற்று நின்றன. நேற்று மும்முரமான ஆகாயச்சண்டை நடந்தது. ஏறக்குறைய 27 ஆகாயச்சண்டைகள் நடந்தன. சத்துருக்களின் ஆகாயக்கப்பலொன்று அவர்களின் அணியில் வீழ்த்தப்பட்டது. ஒன்று பழுதுபட்டுக் கீழே இறங்கிற்று. வேறொன்று சுடப்பட்டு நூறு அடி தூரத்திலிருந்து வீழ்ந்தது. வேறு மூன்று ஜர்மன் ஆகாயக்கப்பல்கள் துரத்தப்பட வேறு இரண்டுபழுதடைந்தன. பிரிட்டிஷ்சைநியத்தின் நிலையை அறிவதற்கு பல ஜர்மன் கப்பல்கள் பறந்தபோது அவைகள் துரத்தப்பட்டன. இரண்டு பிரிட்டிஷ் ஆகாயக்கப்பல்கள் சத்துருக்களின் அணியில் வீழ்த்தப்பட்டன.

கடிதம்.

ஆறுமுகநாவல ஆநந்தாச்சிரமம்.

நமது யாழ்ப்பாணத்து வட்டுக்கோட்டையின் வடசாரதாகிய சித்தன்கேணி எனவழங்கும் சித்தபுரத்தில் ஸ்ரீ மகாகணபதி கைலாசநாதஸ்வாமி கோயிலின வடக்குவீதியில் ஸ்ரீ. அம்பலவாணநாவலசுவாமிகள் தமது பிரமசரிய பூர்வாச்சிரமத்தில், தமதுதந்தையார்பழவராயர் ஆறுமுகபிள்ளையாலும் சகோதரர்களாலும் நன்கொடையாகவும் சகோதரிகளால் கிரயமாகவும் தமக்குக்கிடைத்த சின்னப்புலம்மலை ஓர் பெரிய தோட்டத்தைத் தமது குருமுதல்வரும் சைவசமய ஸ்தாபனாசாரியருமாகிய ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலசுவாமிகளுக்குச் சமர்ப்பித்து இதுதமது மடாலயம், வித்தியாசாலை முதலிய சைவசொத்தையும் பொதுவகையாற் சமர்ப்பித்ததுபோலாகாது, சிறப்புவகையாற் சமர்ப்பித்ததாகுக வென்னும் கருத்தால், இதன்கட் பொருந்திய வில்வச்செழிப்பால இதற்கு வில்வாரணியம் என்னும் பெயர்தந்து, இதன் நடுவில் ஆறுமுகநாவல ஆநந்தாசிரமம் என்னும் பெயரால, தமது குரு ஸ்ரீமத் நாவலர் பெருந்தகையார்க்கு ஓர் ஆலயமமைத்து அதன்கண் அவர்களைப் பிரதிட்டைசெய்து நித்திய நைமித்திக குருபூசை மகேஸ்வரபூசை சித்தாந்த சிரவணம் நிகழ்வித்து வருவதாக உத்தேசித்து,

கானது நள௵ வைகாசி௴ ௨௰ சுக்கிரவாரத்தில் உதயகாலத்தில் சுபவேளையில் ஆலயத்திற்கு அஸ்திவாரம் இடுதல் என்னும் ஆதாரசிலாஸ்தாபனம் செய்வித்தார்கள். இதற்குரிய விக்கினேஸ்வரபூசை முதலிய மங்கள கிரியைகளை மேற்படி நாவலர் பெருந்தகையார்பால் பண்புபூண்டொழுகிய வித்வான் ப்ரம்மஸ்ரீ. அருணாசல சாஸ்திரிகள் செய்தார்கள். அப்போது ஊரில் உள்ளார் பலரும் வந்து ஸ்ரீமத். ஆறுமுகநாவலபெருமானுக்கு வாழ்த்துரை மொழிந்து மகிழ்ந்தார்கள். எல்லார்க்கும் பிரசாதம் அளிக்கப்பட்டது.

மேற்கண்ட தோட்டம் சுமார் 30 பரப்புடையதாய் நல்லதண்ணீர்க் கிணறு சகிதமுற்றுத் தென்னை கமுகு பலா வாழை முதலிய சற்பயிர் செறிந்து நீர்வளம் நிலவளமமைந்துமிக்க சௌகரியமுடையது. இது இக்கால வீதத்திற்குச் சுமார் ரூபா (15000) பதினையாயிரமுடையது. இதனை நற்குடியிற் பிறந்த தமது பூர்வாச்சிரம பந்துக்களுக்குக் குருபணியின் மகிமையைப் போதித்து,

அவர்கள் சம்மதத்தோடு தானே குருபாத சமர்ப்பணம் செய்து, இதில் என்றும் அழிவில்லாத பரோபகார பரமசிவபுண்ணியமாக, இவ்வனம் தமது குரு சந்நிதி என்னும் புண்ணியாச்சிரம நிர்மாணம் செய்த ஸ்ரீ. அம்பலவாணநாவலசுவாமிகளது செயல் மிக வியத்தற்பாலதே. அவர்கள் உத்தேசம் இனிது முடியுமாறு குருவருள் துணை செய்வதாக.

இனி நமது தென்னாட்டினுள் ஓர் பொன்னாடென விழங்கும் இவ்வீழநன்னாட்டில் சைவர்கள் வாழும் பல ஊர்களிலும் தமது குருமுதல்வனார் போல் இன்னும் இதுபோலப் புண்ணியாச்சிரமங்கள் பல அநேகரு அமைக்கப்பெற்று, அவர்கள் நிறுவிய சைவசித்தாந்த மெய்ந்நெறி அநுபவத்தோடொட்டிய நன்னெறியால் வளர்த்துவரல் வேண்டுமென்பது அவர்கள்பாத கைங்கரியம் தலைநின்றொழுகும் ஸ்ரீ. அம்பலவாண நாவலசுவாமிகளது பெருவிருப்பம். இது அவர்கள் பிரசங்கங்களாலும் செயல்களாலும் நிதர்சனமாக யார்க்கும் தெளிந்ததொன்றே. இவை எல்லாம் அங்ஙனம் முற்றுப்பெற்று நமது நாடு செல்வமும் ஞானமுமலிபாக்கிய உயர்தர சைவநாடுகளுள் ஒன்றென்னும் தன தமது மகிமைகுறையாது மகைசுவரிய ஞானசுகமாய் விழங்கிவருமாறு திருவருளையும் குருவருளையும் வேண்டுதல் செய்கின்றோம்.

☞ மேலே கண்ட ஆறுமுகநாவல ஆச்சிரமத்தின் மேல்சாரதாகிய தோட்டம் ஒன்றை மெசுவாமிகள் ஜன்மசகோதரராகிய ஸ்ரீ. ஆ. தில்லையம்பலபிள்ளை அவர்கள் சுவாமிகள் யோசனைக்கிணங்கித் தண்ணீர்ப்பந்தல் தருமத்திற்காக உத்தேசித்திருக்கிற பெருஞ்செயல் கேட்டு மிகமகிழ்ச்சியுறுகின்றோம். சடித.

காரைதீவு மதுவிலக்குச்சங்க
உ-ம் வருடோற்சவ வைபவம்.

இச் சங்கத்தின் இரண்டாம் வருடோர்சவம் இம்மதி சஉ௳ சனிவாரம் வெகு விமரிசையோடு நடந்தேறியது. காலை ஐந்துமணியளவில் பாடசாலை மாணவர் யாவரும் மதுவிலக்குச் சின்னங்களோடு கைகளில் கொடி பிடித்துக்கொண்டு மேளதாள வாத்தியத்துடன் இவ்வூரை வலம்வந்தனர். ஆங்காங்கு ஆலய வணக்கமும் செவ்வனே நடைபெற்றது. பின்னர் சாயந்தரம் மிஷன் ஆங்கில பாடசாலையில் பற்பலபகுதிகளிலுமிருந்து வெகு சனங்கள் வந்து கூடினர். பாடசாலையும் பாடசாலைக்கு முன்னர் அமைந்திருந்த பந்தலும் சன்னுத் அலங்காரமாய் கல்லூரி மாணவரால் சிங்காரிக்கப்பட்டிருந்தன. அவ்விடத்தில் அமைக்கப்பட்டிருந்த மேடையின் மீது சங்க அக்கிராசனர் ஸ்ரீ. அல்வின் ஆபிரகாம் ஆசிரியர் அவர்கள் உட்கார "நாமார்க்குங் குடியல்லோம்" என்ற தேவாரம் ஓதிக் கூட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் சங்கலிகிதர் ஸ்ரீ. இ. வேலுப்பிள்ளையவர்கள் வருடாந்த அறிக்கைப்பத்திரத்தை வாசித்துட்கார, வட்டுக்கோட்டை சனம் பிக்னல் அவர்கள் கேட்போர் மனங் குதூகலிக்கும்படி அமரிக்க தேசங்களிலே மதுவிலக்கு விஷயமாக நடத்தப்படும் ஊழிய வகையைப்பற்றிச் சிறந்ததோர் பிரசாரணஞ் செய்தனர். பின்னர் விக்ரோரியாக் கல்லூரித் தலைவர் (Professor Small) அவர்கள் குடிவகையைப்பற்றியும் அதனாலுண்டாகுந் தீங்குகளைப் பற்றியும் சாஸ்திரசம்பந்தமாய் யாவர்மனதிலும் அழுந்துமண்ணம் அரியதோர் பிரசங்கஞ் செய்தனர். அதன்பின் வட்டுக்கோட்டைக் கல்லூரி ஆசிரியருள் ஒருவராகிய Mr. J. V. செல்லையா அவர்கள் சிறிதுகாலத்துக்குமுன் தனக்கு நேரிட்ட அபாயமான நோயிலிருந்து தவறியது தாம் மதுவைத் தீண்டாதிருந்தமைத்த நியாயமெனத் தமமைப் பரிகரித்த வைத்தியர்கள் சொன்னார்களென்றும், ஆனதன்மையால் யாவரும் இது விஷயத்தில் எச்சரிக்கை யுள்ளவர்களாய் இருக்கவேண்டுமென்றும் பகர்ந்தனர். அதன்பின் மானிப்பாய் இந்துகல்லூரித் தலைவர் ஸ்ரீ. ஹட்சன் ஆசிரியா அவர்கள் நகைவிளைக்கக்கூடியவகையான பேச்சுக்களைப் பேசியுட்கார, அளவைநகர மதுவிலக்குச் சபையாரா லனுப்பப்பட்ட தொந்தாசு ஸ்ரீ. கந்தையாபிள்ளை அவர்கள் அளவைநகர் மதுவிலக்குச் சங்கத்தார் இச்சபைக்குக் கூறிய ஆசிமொழிகளையும், வேறு காத்திரமான பேச்சுக்களையும் பேசி முடிக்க, தெல்லிப்பழை ஸ்ரீ. துரையப்பா அவர்கள் சங்கத்தார் எடுத்தகாரியத்தை விடாமுயற்சியுடன் நடத்திவரவேண்டுமெனப் பேசினர். ஈற்றில் சபை உப அக்கிராசனர் ஸ்ரீ. இ. கே. சிவசுப்பிரமணிய ஐயரவர்களும், அக்கிராசனர் ஸ்ரீ. ஆபிரகாம் ஆசிரியர் அவர்களும் சபையார்க்கு வந்தனம் கூறக் கூட்டம் முடிவெய்தியது.

இவ்வாண்டுக் கூட்டத்தை நடத்தியவர்கள் பற்பல கலலூரிகளில் வாசிக்கும் இவ்வூர் வாலிபா என்பதைக் காணும்போது இச்சங்கம நல்ல நிலையில் வந்திருக்கிறதென்பது நன்குவிளங்கக்கிடக்கின்றது. பகவான் சங்கத்தை நீடூழிகாலம் நிலைபெறச்செய்யக் கடாட்சிப்பாராக. சடித.

விளம்பரம்.

1916-ம் ஆ ஐப்பசி௴ 1௳ தொடக்கம் 1919-ம் ஆ புரட்டாதி௴ 30௳ வரைக்குமுள்ள ஒன்று இரண்டு மூன்றுவருடங்களுக்கு அம்பாந்தோட்டை, திசமாகாறு ஆகிய இடங்களிலுள்ள கவண்மேந்து ஆஸ்பத்திரிகளுக்குச் சாப்பாட்டுச்சாமான் கொடுக்கிறதற்கு ஒப்பந்தக் கேள்விக் கடுதாசிகள், ஒப்பந்தக் கேள்வி விசாரணைச் சங்கத்தலைவரால் 1916-ம் ஆ ஆனி௴ 27௳ மத்தியானம் 12 - மணிவரைக்கும் கொழும்பிலிருக்கும் கந்தோரி லேற்றுக்கொள்ளப்படும்.

இன்னும் தேவையான விபரங்களுக்கு கவண்மேந்துக் கசற் பத்திரிகையைப் பார்க்கவும். அல்லது பிரதம சிவில் மெடிக்கல் ஆபிசரிடமிருந்தும் அறிந்துகொள்ளலாம்.

விளம்பரம்.

யாழ்ப்பாணம் றெக்குவெஸ்கோட்டிஸ்
அராலி கிழக்கு சண்முகம் வயித்திலிங்கம் கைமபெண் ஆச்சிப்பிள்ளை
வளக்காளி.
இல 11677/A
அராலிதெற்கு சண்முகம் அம்பலவாணி
எதிராளி

1908-ம் ஆ புரட்டாதி௴ 5௳ மேற்குறித்த எதிராளி அராலிகிழக்கில ரூபா 150-க்கும் அதற்கு 12 வீத வட்டிக்கும் ஈடு எழுதிக் கொடுத்திருப்பதாலும் மேற்குறித்த வளக்கில் அவரைச் சித்தாரித்த அவரைக் காணுதபடியாலும் சின்னையா கைமபெண் முத்தாச்சி ஈடுக்காணியில் ஆட்சியிலிருப்பதாலும் அவவுக்கே மேற்குறித்த எதிரியினுடைய கட்டளையைக் கொடுக்குபபடியாய்க் கோடு கட்டளை பண்ணியிருப்பதாலும் எல்லாரும் அறிய வேண்டியது: இந்தக் காணியைப்பற்றிச் சோந்தை உள்ளவர்கள் அல்லது மேற்குறித்த எதிரியாவது 1916 ம் ஆ ஆனி௴ 29௳ அல்லது அதற்குமுன் இக்கோட்டில் வந்து வெளிப்படவேண்டியது.

1916-ம் ஆ ஆனி௴ 19௳. S. Kandayya, Proctor,
for Plaintiff in Case
No. 11677/A.

அறிவித்தல்.

கைதடிகுடி சரவணமுத்து சோமலிங்கமாகிய நான் இதனுற் சகலருக்கு மறிவிப்பதென்னவென்றால், அவ்வூர்குடி சடையர் தாமோதரர் என்பவர் எனக்கு 1916-ம் ஆ மாசி௴ 12௳ க்கும் 14௳ க்குமிடையில் ஒரு I. O. U. என்னும் பத்திரம் ரூபா 900-க்கு எழுதிக்கொடுத்தார். அதன் பின் சொல்லப்பட்ட பத்திரத்தின் தொகைக்கு அவரும் அவர் மனைவியுமோர் ஈடு எனக்கும் என் மனைவிக்கும் கொடுத்திருப்பதால் அப்பத்திரம் விலையற்றுப்போய்விட்டது. ஆயினும் அப்பத்திரத்தை இழந்துவிட்டபடியால் அதைக்காணுகிறவர்கள் எனக்கு அல்லது சடையர் தாமோதரருக்குக் கொடுக்கவும்.

14-6-16. ச. சோமலிங்கம்.

விளம்பரம்.

கொழும்பிலுள்ள பழைய சோனகதெருவிலிருக்கும் அரசினர் மகமதிய தமிழ்ப் பெண்பாடசாலைக்கு முதலாம உபாத்தியாயி ஒருவர் வேணடும. சம்பளம் வருடமொன்றுக்கு ரூபா 240 இதனோடு கொழும்பு வீட்டுவாடகைச் செலவாகவும் வருடமொன்றுக்கு ரூபா 60 கொடுக்கப்படும. விரும்பியவர்கள் விண்ணப்பப் பத்திரங்களை, யோக்கியதாபத்திரங்களோடு, 1916-ம் ஆ ஜூன்௴ 26 ந் தேதிக்குமுன் வித்தியாதிகாரிக்கு அனுப்புக.

ச. எவன்ஸ்,
வித்தியாதிகாரி ச பி. டென்ஹாம
அவர்களுக்காக.
வித்தியாகந்தோர்,
கொழும்பு 1616-ம் ஆ ஜூன்௴ 2௳

விளம்பரம்.

பனூர்ஸ் பட்டுச்சேலை.

1. சிகப்பு, ரோஸ், பச்சை, புளூ, ஊதா, வெளுர்ரோஸ், வெளுர்பச்சை, லேட்புளூ, பிஸ்கலர் இன்னும் பலமாதிரி நிறங்களில் உடல் பூராவும் பட்டில் பலவித பூ கொடி வேலைகள் செய்த சரிகை பனூர்ஸ் கரை பனூர்ஸ் முந்தி 16 முளம் சேலை ரூ 23 முதல் 25 வரை.

2. மேற்படிகரையில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

3. மேற்படி சரிகை பனூர்ஸ்கரை உடல் பூராவும சரிகைமத்தாபபு பெரிய கொட்டடி 16முளம் சேலை ரூ 35 முதல் 40 வரை.

4. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 40 முதல் 45 வரை.

5. மேற்படி சரிகை பனூர்ஸ்கரை உடல பூராவும் சரிகைமத்தாப்பு சன்னக் கொட்டடி 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

6. மேற்படி உடலில் கரைக்குச் சரிகை மாம்பிஞ்சு போட்டது 16 முளம் சேலை ரூ 50 முதல் 55 வரை.

7. மேற்படிசரிகை பனூஸ்கரையில் உடல் பூராவும சரிகை நக்ஷத்திர புட்டா போட்ட 16 முளம் சேலை ரூ 45 முதல் 50 வரை.

8. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் மத்தாப்பு முந்திபோட்ட 16 முளம் சேலை ரூ 30 முதல் 35 வரை.

9. மேற்படி நிறம் சரிகை மத்தாப்புக்கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 35 முதல 40 வரை.

10. மேற்படி மத்தாப்பு சரிகை கரையில் உடல் பூராவும் சன்னமாக மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 55 முதல் 60 வரை.

11. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்ட 16 முளம் சேலை ரூ 60 முதல் 65 வரை.

12. மேற்படி சாதா பனூர்ஸ்கரையில் உடல் பூராவும் நெருக்கு ஊசி வாணம் மத்தாப்பு சரிகை கொட்டடி 16 முளம் சேலை ரூ 75 முதல் 80 வரை.

சகாயவிலை! சகாயவிலை!!

கல்யாண பட்டுச் ஜவுளிகள்.

இந்தியர்களால் தயார் செய்யப்பட்டது.

நம்பிக்கையும் நாணயமும் நயமுமுள்ள தினுசுகள்.

குறிப்பு.

மதுரையிலிருக்கும், மு. க. ராமய்யர் அன்சன்ஸ் ஜவுளி கம்பனியென்றால் உலகம் பூராவும் நன்றாய் அறிவார்கள் அனுபவம் பெற்றுத் தேர்ந்த நெசவுகாரர்களால் தயார்செய்து வருகின்ற விசேஷமான ஜவுளித் தினுசுகள்.

பாவிப்புக்கும் சலவைக்கும் பரிசுத்தமாகவும், தலாம்பரமாகவும் விளங்கும் படியான மிகவும் உயர்ந்த சரிகை, சாய், பட்டு நூல்களில் தயார் செய்யப்படுகின்றது

ஒருமுறை எங்கள் கம்பேனி ஜவுளிகளைப் பாவித்தவர்கள் எப்போதும் எங்கள் ஜவுளிகளை உபயோகிக்க மனமுள்ளவர்களாயிருப்பார்கள்.

கல்யாணச்சடங்கு முதலிய விசேஷகாலத்தில் உபயோகிக்கும்படியான மேன்மைபெற்ற பட்டுச் ஜவுளிகளும் சாதாரணமாக எப்போதும் பாவிக்கக்கூடிய பலமாதிரி நூதன ஜவுளிகளும் ஏராளமாய்த் தயார்செய்யப்படுகின்றது. கொழும்பு, கண்டி, காலி, மட்டக்களப்பு, திரிகோணமலை, யாழ்ப்பாணம ரெங்கூன, பினாங்கு, சிங்கப்பூர், கோலாம்பூர்முதலிய அனேக இடங்களிலிருக்கும் வியாபாரிகளுக்கும், கமிஷன ஏசண்டுகளுக்கும சொந்தப்பாவிப்புக்காரர்களுக்கும உத்தியோகஸ்தாகளுக்கும பிரபுக்களுக்கும் தோட்டத்துக் கங்காணி கணக்கப்பிள்ளை கண்டக்டர் முதலிய யாவர்களுக்கும் எங்கள் கம்பேனி ஜவுளிகள் ஏராளமாய் அனுபபுகிறோம.

இதுவரையிலும் எங்கள் கம்பேனியில் ஜவுளிகள் வாங்கி வருகின்றவர்களும் இனிமேல வாங்குகிறவர்களும அவரவர்கள் வளவிலும அவரவர்கள் சொந்தக்காரர்கள் வளவிலும சிநேகிதர்கள வளவிலும் இப்போது நடக்கப்போகிற கல்யாணச் சடங்குகளுக்கும் முக்கியமாய்த் தேவையான கூறைப்புடவைகளும், நவுகைகளும், சால்வைவேட்டிகளும், இன்னும் பலமாதிரித் தினுசுகளுக்கும முன்னாடிய எங்கள் கம்பனிக்கு ஆர்டர்கொடுத்து விருப்பமுள்ள தினுசுகள பெற்றுக்கொண்டு பெரும் லாபமும நயமும அடையவேண்டியது.

சில கூறைப் புடவைகளின விலைகளும் தினுசுகளின் விபரமும் இதில் தெரிவித்திருக்கிறது மற்றத் தினுசுகளின் விபரங்கள தெரிந்துகொள்ளவேண்டியவர்கள் கடிதமூலமாக விலாசந் தெரிவித்தால கேட்லாக இனாமாக அனுபபகூடும.

வியாபாரிகளுக்கு மொத்தமாகவும சில்லறையாகவும் சகாயவிலைக்குத் தேவையுள்ள தினுசுகள் அனுபபக்கூடும.

இலங்கை, பர்மா, சிங்கப்பூர, பினாங்கு முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் தபால் வி. பி. பார்சலாக அனுபபகூடும.

F. M. S. சைசேர்ந்த கோலாலம்பூர் முதலிய இடங்களுக்குச் ஜவுளிகள் பாங்குமூலமாய் அனுப்பக்கூடும்.

முக்கிய கவனிப்பு.

தேவையான நிறங்களும், விலையும், கம்பருங்கண்டு விபரமாய் எழுதவேண்டியது.

(தொடர்ச்சி.)

13. மேற்படி கரையில் சரிகை மாம்பிஞ்சுபோட்டு மேற்படி உடல்சரிகைகொட்டடி 16 முளம் சேலை ரூ 80 முதல் 85 வரை

14. மேற்படி கரையில் ரெட்டக்கரையாகவும் கரைக்குக் கொடிபேட்டுகள் வைத்த உடல்சரிகைகொட்டடி 16முளம் சேலை ரூ 85 முதல் 90 வரை

15. மேற்படிமாதிரிக் கரையில் உடல் பூராவும் சரிகை ரெட்டக்கொட்டடி நெருக்கு ஊசி வாணக்கொட்டடி 16 முளம் சேலை ரூ 100 முதல் 120 வரை.

16 மேற்படி கரையில் உடல் பூராவும் சரிகைஜோட்டபபனிவாணத்தார் கொட்டடி 16முளம்சேலை ரூ 120முதல் 150வ.

17. மேற்படி ஒற்ற பனூர்ஸ் கரையில் உடல் சரிகை கொட்டடியில்சரிகை புட்டா சேலை ரூ 75 முதல் 80 வரை.

18. மேறபடிமாதிரிஉடலில் கரைக்கு ரெட்டக் கரையாகவும் கொடிபேட்டுகள் வைத்த சேலை ரூ 100 முதல் 120 வரை.

19. காஸ்மீர் பட்டில உடல் சாதா கரைக்கும் முந்திக்கும சரிகைவேலை செய்த ரோஸ், சிகப்பு, பச்சை, ஊதா நிறமுள்ள சேலை ரூ 20 முதல் 25 வரை.

20. மேறபடி உடல் சரிகை புட்டா சேலை ரூ 27 முதல் 35 வரை.

(கொர்நாட்டுப் புடவை.)

21. மேற்படிநிறங்களில் உடல் சாதா முந்தி சரிகைவேலை மானம் சேலை ரூ 17 முதல் 20 வரை.

22. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரைச் சேலை ரூ 20 முதல 25 வரை.

23. மேற்படி சாதாக்கரையில் உடல் சரிகைகொட்டடிசேலை ரூ 25 முதல் 30 வ.

24. மேற்படி சரிகை ருத்திராக்ஷக் கரையில் உடல் சரிகை கொட்டடி சேலை ரூ 35 முதல் 40 வரை.

25. உடல் மஞ்சள் நிறம் ஜோட்டு பப்ளி, வைடூரிய பப்ளி, கூறை முந்தி சேலை ரூ 15 முதல் 25 வரை.

26. மேற்படி சுத்தப்பட்டு நயம் கொட்டடிசாயச்சேலை ரூ 25முதல் 30வரை.

27. மேற்படி கரைக்கும் முந்திக்கும் சரிகைபோட்டசேலை ரூ 30மு. 35வரை.

மு. க. ராமய்யர் அன்சன்ஸ், மேலக்கோபுரவாசல்,
போஸ்ட் நம்பர் 48 மதுரை, தென் இந்தியா.

M. K. Ramier and Sons. West Tower St.
Post No. 48 Madura, South India.

வான்முகில்வழாதுபெய்கமலிவளஞ்சுரக்கமன்னன், கோன்முறையரசுசெய்கக்குறைவிலாதுயிர்கள்வாழ்க, நான்மறையறங்களோங்கநற்றவம்வேள்விமல்க, மேன்மைகொள்சைவநீதிவிளங்குகவுலகமெல்லாம்,

☞ Printed and published by S. KandiahPillai, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.